கள். எப்போதுமே நியாயமான கோரிக்கைகளை ஏற்கக்கூடிய இந்த ஆட்சியை எதிர்த்து நீதிமன்றத்திற்குப்போகக்கூடாது என்று நானே அந்த நிர்வாகத்தினரை கேட்டுக் கொண்டேன். அதன் அடிப்படையில் அவர்கள் நீதி மன்றத்திற்குச் செல்லவில்லை. இருப்பினும் தற்போது உச்ச நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்து இருக்கின்ற அந்த 150 பள்ளிகளில் இந்தப் பள்ளி அடங்காது. எனவே அப்படி நீதிமன்ற உத்தரவின் பேரில் பரிசீலிக்கக் கூடிய நேரத்திலாவது இந்தப் பள்ளியைச் சேர்த்து கருணை யோடு பரிசீலிக்க இயலுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்வித் துறை மிகுந்த கருணையோடு பரிசீலிக்கும். நிதித் துறை வேறு வழியில்லாத காரணத்தால் மறுக்கும். (சிரிப்பு).

திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதி வைத்து இருப்பவர்கள் கருணையோடு செய்யக் கூடியவர்கள் என்பது என்னுடைய கருத்து.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதனால் தான் எதிர்காலத்திலே அந்த நிதி வளமாக அமைந்து இப்படிப்பட்ட நிலைமைகளை மாற்றக்கூடும் என்ற நம்பிக்கை இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பஞ்சம் நிதிக்குத் தானே தவிர கருணைக்கு அல்ல.

5. அறிக்கைகள் அளித்தல்

பொது நிறுவனங்கள் குழு.

*திரு. சா. சிவசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொது நிறுவனங்கள் குழுவின் தலைவராக என்னை நியமனம் செய்த மாண்புமிகு பேரவைத் தலைவருக்கும், மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும் முதற்கண் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பொது நிறுவனங்கள் குழுவின் சார்பாக குழுவின் முதலாவது முதல் ஆறாவது அறிக்கை வரை இப்பேரவையில் அளிக்கிறேன்.